செ.வெ.எண்.44 நாள்: 30.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சித்த மருத்துவத்தின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் வகையில் கப சூரண குடிநீர் பொடி பாக்கெட்டுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் அலுவலர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.04.2020 அன்று ஆரோக்கியம் என்ற சிறப்பு திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதன்படி, சித்த மருத்துவத்தின் சார்பில் கப சூரண குடிநீர் (அ) நில வேம்பு குடிநீர் வழங்க பரிந்துரை செய்யப்பட்டது. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அர சுஊழியர்கள் (மருத்துவர்கள், மருத்துவமனை பணியாளர்கள், காவல் துறையினர், வருவாய் துறையினர், தூய்மைப்பணியாளர்கள் மற்றும் பொது மக்கள்) ஆகியோருக்கு நோய் தடுப்பு எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தவும் உடல் நலத்தை பேணி காக்கவும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு அதன் முதற்கட்டமான அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த கப சுரக்குடிநீர் சூரணம் 5 கிராம் அளவு 240 மில்லி தண்ணீரில் கலந்து நன்றாட கொதிக்கவைத்து 60 மில்லி வரும் வரை நன்றாட காச்சி வடிக்கட்டி, காலை உணவுக்கு முன் அருந்தவும், பெரியவர்கள் 60 மில்லியும், சிறுவர்கள் 30 மில்லியும் (12 வயதிற்குட்பட்டவர்கள்) அருந்த வேண்டும்.

இந்நிகழ்வில், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, உதவி மருத்துவ அலுவலர் (சித்தா) பொன்மொழி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**